# செய்தி வெளியீடு எண்.76/2018 நாள் 18.12.2018

**சென்னைக்குடிநீர் வாரிய ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் கவனத்திற்கு**

சென்னைக்குடிநீர் வாரியத்தில், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய சுகாதார காப்பீட்டுத்திட்டம் 2018, 01.11.2018 முதல் அமுல்படுத்தப்பட்டு உள்ளது. இது குறித்து வாரிய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்களது ஓய்வூதிய புத்தகம் (Original) மற்றும் அதன் நகல், கணவன் / மனைவி அவர்களது தலா 2 புகைப்படங்களுடன் சென்னைக்குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் , நிதி (ஓய்வூதியம்) பிரிவை அணுகி Form-IV இரண்டு படிவங்களை பூர்த்தி செய்து அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த திட்டத்தில் பயனடையும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின், ஓய்வூதியத்தில் இருந்து பிரதி மாதம் ரூ.350/– 01.11.2018 முதல் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ரூ. 4 லட்சம் வரை, 4 ஆண்டு காலம் (2018–2022) பயன்படுத்திக் கொள்ளலாம். சென்னைக் குடிநீர் வாரிய ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் உடனடியாக மேற்க்கூறிய படிவத்தினை பூர்த்தி செய்து வேலை நாட்களில் தலைமை அலுவலகத்தில் காலை 11 மணி முதல் மாலை 5 மணிக்குள் சமர்ப்பித்து, காப்பீட்டு அடையாள அட்டையினை பெற்றுக் கொண்டு, இந்த மருத்துவ காப்பீட்டு சலுகையை 01.11.2018 முதல் பயன்படுத்திக் கொள்ளலாம் என சென்னைக்குடிநீர் வாரியம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்